


# சக்கர வியூகம்




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 201 14.1.2026 WEDNESDAY MARGAZHI : 30 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 201 14.1.2026 புதன்கிழமை மார்கழி : 30 விலை : ரூ.5/–

## பொங்கட்டும் மகிழ்ச்சி, வெல்லட்டும் தமிழகம்

# “முதல்வர் பொங்கல் வாழ்த்து”



■ திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி அய்யம்பாளையம் மருதாநதி நீர்த்தேக்கத்திலிருந்து, விவசாயிகளின் பாசன வசதிக்காக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ_ பெரியசாமி அவர்கள், தற்போது தண்ணீர் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சென்னை : ஜன.14-

பொங்கட்டும் மகிழ்ச்சி ; வெல்லட்டும் தமிழகம் என திமுக தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளார்

அவரது அறிக்கை : தை முதல்நாள் தமிழர் வாழ்வில் சிறப்புமிக்க நாள் . இல்லங்களிலும் உள்ளங்களிலும் இன்பம் பொங்கிடும் பொங்கல் விழா தொடங்குகிற நன்னாள் . உழைப்பைப் போற்றுகின்ற திருநாள் . தமிழ்ப் பண்பாட்டை உலகம் அறிந்திடும் வகையில் மகிழ்ச்சியான கலை , பண்பாட்டு நிகழ்வுகளும் பாரம்பரியமிக்க விளையாட்டுப் போட்டிகளுமாகக் கொண்டாடப்படுகிற நாள்

அந்த மகிழ்ச்சி இந்த ஆண்டில் , இன்னும் கூடுதலாக இருப்பதை தமிழகம் முழுவதும் காண முடிகிறது . இயற்கை சீற்றங்கள் ஏற்பட்ட போதும் , விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் துணையாகவும் அரணாகவும் நின்றது திராவிட மாடல் அரசு

முன்னணி மாநிலம் . பொங்கல் திருநாள் என்பது தமிழர்கள் அனைவருக்குமான



திருவிழா . அதில் சாதி பேதம் கிடையாது . மத வேறுபாடுகள் கிடையாது . ஏழை , பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு கிடையாது . பெண் , ஆண் என்ற பாகுபாடு கிடையாது . எல்லாருக்குமான திருநாள் பொங்கல் . ஆட்சிப் பொறுப்பேற்றபோது கொரோனா இரண்டாவது பேரலையின் கடுமையான தாக்கம் , அதனைத் தொடர்ந்து நிரந்தரக் கொரோனா போல தாக்கிக் கொண்டே இருக்கும் மத்திய பாஜ அரசின் தமிழகத்தின் மீதான வஞ்சகம் , அவ்வப்போது எதிர்கொண்ட இயற்கைப் பேரிடர்கள் என எல்லாவற்றையும் கடந்து , தமிழகம் இன்று பல்வேறு இலக்குகளில் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது . அதை மத்திய அரசின் துறைகள் வெளியிடும் புள்ளிவிவரங்களும் த ர வ ரி சை க ளு மே உறுதிப்படுத்துகின்றன

மகிழ்ச்சி . ஒன்று கோடியே முப்பது லட்சம் குடும்பத் தலைவியருக்கு மகளிர் உரிமைத் திட்டத்தின் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாயும் , இரண்டு கோடியே இருபத்து மூன்று லட்சம் அரிசி அட்டைதாரர்களுக்கு மூன்று ரூபாய் ரொக்கத்துடனான பொங்கல் பரிசுத் தொகுப்பும் வழங்கப்பட்டு உள்ளது . தமிழகத்தின் பத்தாண்டுகால இருளை விரட்டி , விடியலைக் கொண்டு வந்த திராவிட மாடல் ஆட்சி அமைவதற்கு ஓயாது பாடுபட்ட கட்சியினர் மனதிலும் மகிழ்ச்சி பொங்க வேண்டும் . தை முதல் நாளில் , தமிழர்களின் இல்லங்கள்தோறும் மகிழ்ச்சி பொங்கட்டும் . அந்த மகிழ்ச்சி நம் அனைவருக்கும் ஊக்கத்தையும் உத்வேகத்தையும் வழங்கட்டும் . சூரியனைப் போற்றும் பொங்கல் நன்னாள் , உடன்பிறப்புகளின் உழைப்பினால் கழகத்திற்கு வெற்றிப் பொங்கலாக அமையட்டும் . பொங்கட்டும் மகிழ்ச்சி . தமிழகம் வெல்லட்டும் . இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்



## திசையன்விளையில் பாஜகவினரை தாக்கிய திமுகவினரை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

திசையன்விளை, ஜன.14-

திசையன்விளையில் தொலைக்காட்சியின் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று திமுக கட்சியின் குறைகளை கூறியதற்காக, பாரதிய ஜனதா கட்சியின் மாநில இளைஞரணி தலைவர் எஸ்ஜி.சூர்யா மற்றும் பாஜகவினரை தாக்கிய திமுகவினரை கண்டித்தும், அவர்களை கைது செய்யாத தமிழக அரசை கண்டித்தும், நான்காவது வார்டு பாஜக கவுன்சிலர் லிவ்யா சக்திவேல் குமார் தலைமையில், ராதாபுரம் வடக்கு ஒன்றிய துணைத் தலைவர் முத்தமிழ் செல்வி, திருநெல்வேலி மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் அந்தோணி ராஜ் , இந்து முன்னணி நெல்லை புறநகர் மாவட்ட செயலாளர் விக்னேஷ், திசையன்விளை நகர தலைவர் அழகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில், திசையன்விளை காமராஜர் சிலை முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், மத்தி ஒன்றிய முன்னாள் பொதுச் செயலாளர் முருகானந்தம், சாமிநாதன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் தர்மராஜ், ஒன்றிய துணைத் தலைவர் குமாரி, ஆறுமுகம், சக்தி கேந்திர பொறுப்பாளர் ராஜ்குமார், குழந்தை வேல் இந்து முன்னணி மாவட்ட செயற்குழு உறுப்பினர் செந்தில், நகர பொதுச் செயலாளர் மணிகண்டன், சங்கர், முருகேசன், ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னாள் ஒன்றிய தலைவர் சக்திவேல் குமார் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.



■ உடுமலை வட்டம் உடுக்கம்பாளையம் அரசு தொடக்கப்பள்ளியில், பொங்கல் விழாவானது தலைமை ஆசிரியர் மரிய புஷ்பம் தலைமையில், அப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர் தருண் நிவேஷ் பெற்றோரும், துர்கா அறக்கட்டளை நிறுவனரும் துர்கா ஈஸ்வர சாமி அவரது குடும்பத்தாருடன், பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, குழந்தைகளுடன் பொங்கல் தின விழாவை சிறப்பாக கொண்டாடினர்.

## சிந்தாமணி அமராவதி மெட்ரிகுலேஷன்பள்ளி, பாரா மெடிக்கல் கல்லூரி சமத்துவ பொங்கல் விழா



தென்காசி, ஜன.14.

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே சிந்தாமணியில் அமைந்துள்ள அமராவதி பாரா மெடிக்கல் கல்லூரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளியில், சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி நிறுவன தலைவர் பாலசுப்ரமணியன் சாந்தா,தலைமை வகித்தார். டாக்டர்கள் ராமகிருஷ்ணன், டாக்டர் சண்முகப்பிரியா, அட்வகேட் வெங்கடேஸ்வரன், வழக்கறிஞர் சேர்மன் கார்த்திகா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, சமத்துவபொங்கல் விழாவை துவக்கி வைத்தனர். விழாவில் பள்ளி தலைமை ஆசிரியை லீலாவதி, ஆசிரியைகள், ஈஸ்வரி, பவித்ரா, கலைவாணி, சுப்புலட்சுமி, கீதா, தங்கமாரி, கனகஜோதி, அமராவதி பாரா மெடிக்கல் கல்லூரி தலைமை ஆசிரியை முருகலட்சுமி, ஆசிரியைகள் தனலட்சுமி, செல்வ பிரியா, சாய் ஸ்ரீ, சித்ரா, பூமாரி, ,மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சங்கரன் கோவிலில் திமுக 101 பானைகளில் சமத்துவ பொங்கல் விழா

சங்கரன்கோவில், ஜன.14

தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சங்கரன் கோவில் எம் எல்ஏ அலுவலகத்தில் வைத்து சமத்துவ பொங்கல் விழா நடந்தது. இதில் மாவட்ட அவைதலைவர் சுப்பையா தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, யூஎஸ்டி சீனிவாசன், பரம குரு, மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், மாவட்ட பொருளாளர் சரவணன், கூட்டணி மாவட்ட செயலாளர்கள் இந்திய யூனியன் முஸ்லிம் முஸ்லிம் லீக் செய்யதுபட்டாணி, திராவிட தமிழர் கட்சி மகாலிங்கம், ஆதித்தமிழர் பேரவை மதன், ஆதித்தமிழர் கட்சி பொதிகை ஆதவன் முன்னிலை வகித்தனர். இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலா ளர் ராஜா



எம்எல்ஏ கலந்து கொண்டு 101 பொங்கல் பானைகளில் சமத்துவ பொங்கல் வைக்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து தமிழர் பண்பாட்டை உணர்த்தும் வகையில் பாரம்பரியவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திமுக மாவட்ட துணைச் செயலாளர்கள் ராஜதுரை, புனிதா, மனோகரன் ஒன்றிய செய லாளர்கள் லாலா சங்கர பாண்டியன், கடற்கரை, பொன்முத்தையாபாண்டி யன், பெரியதுரை, வெள் ளத்துரை, ராமச்சந்திரன், சேர்மத்துரை, கிறிஸ்டோபர், பால்ராஜ், அன்பரசு, குணசேகரன். பொதுக்குழு உறுப்பினர்கள் மாரிச்சாமி, தேவா, வேல்சாமி பாண்டியன், மகேஸ்வரி, பராசக்தி, சாகுல் ஹமீது, நகர செயலாளர்கள் பிர காஷ், அந்தோணிசாமி. நாகூர் கனி, அந்தோணிசாமி, பேரூர் செயலாளர்கள் ரூபிபாலசுப்பிரமணி யன், குருசாமி, மாரிமுத்து, சேது சுப்பிரமணியன், நகராட்சி சேர்மன்கள் கவுசல்யா, விஜயா சவுந்திரபாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## காந்திகிராம பல்கலைக்கழக தமிழ்த்துறையில் இலக்கியப்பேராசன் ப.ஜீவானந்தம் அறக்கட்டளை தொடக்கம்

சின்னாளபட்டி, ஜன 14-
காந்திகிராம பல்கலைக்கழக தமிழ்த்துறையில் இலக்கியப்பேராசன் ப.ஜீவானந்தம் அறக்கட்டளை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பாக தொடங்கப்பட்டது.
திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராமகிராமியநிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் இலக்கியப் பேராசன் ப.ஜீவானந்தம் அறக்கட்டளை நிறுவப்பட்டது. காந்தியடிகளால் சிராவயல் ஆசிரமத்தில் ‘இந்தியாவின் சொத்து’ என்று பாராட்டப்பட்டவர் ப.ஜீவானந்தம். மகாகவி பாரதியின் புகழைப் பரப்பிய அவரது இலக்கியப் பணிகள் மற்றும் சிந்தனைகளை இளந் தலைமுறையினரிடம் கொண்டுசேர்க்கும் பொருட்டு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் இந்த அறக்கட்டளை நிறுவப்பட்டது. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், பொருளாளர் பா.ப.ரமணி, செயற்குழு உறுப்பினர் நவநீத கிருஷ்ணன் கலை இலக்கியப் பெருமன்றத்தின் மதுரை மாவட்டத் தலைவர் மு.செல்லா ஆகியோர் அறக்கட்டளை வைப்பு நிதியான ரூ.3 இலட்சத்திற்கான காசோலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் ந.பஞ்சநதம், மற்றும் பதிவாளர்(பொ) மா.சுந்தரமாரி ஆகியோரிடம் வழங்கினர்கள். இந்த நிதியின் வட்டியின் மூலம் ஆண்டுதோறும் ப.ஜ ீவானந்தம் அவர்களின் படைப்புகள் மற்றும் சிந்தனைகளை மையமாகக் கொண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடத்தப்படும். நிகழ்;சியில்; கலை இலக்கியப் பெருமன்ற பொறுப்பாளர்கள், தமிழ்த்துறைத் தலைவர் பா.ஆனந்தகுமார் ஆகியோர் உட்பட தமிழ்த்துறையைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

## கீழ்வெண்மணி சம்பவத்தின் போது கையாண்ட முறையை தொடரும் திமுக: செ.கு.தமிழரசன் குற்றச்சாட்டு



சென்னை, ஜன.14-
இந்திய குடியரசு கட்சியின் மாநில செயற்குழு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் செ.கு.தமிழரசன் தலைமையில் விழுப்புரத்தில் நேற்று நடைபெற்றது. பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பட்டியலின மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கான திட்டத்தை திமுகவின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் செயல்படுத்தவில்லை. பட்டியலின மக்களை உதாசீனப்படுத்தி ஆட்சி நடத்துகின்றனர். 1968 ல் கீழ்வெண்மணி சம்பவத்தில் தூங்கிக் கொண்டிருந்த 44 பேர் உயிருடன் எரித்து கொல்லப்பட்டபோது, ஆட்சியில் இருந்த திமுக என்ன அணுகுமுறையை கடைபிடித்ததோ, அதை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இப்போதும் கடைபிடிக்கிறது. தமிழகத்தில் கடந்தாண்டு பதிவு செய்யப்பட்ட 2 ஆயிரம் வன்கொடுமை வழக்குகளில் எத்தனை பேருக்கு தண்டனை பெற்று கொடுத்துள்ளனர்? பாதி வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள வழக்குகள் சமரசம் செய்யப்பட்டுள்ளது. துப்புரவு பணியை 99 சதவீத பேர் பட்டியலின மக்கள் செய்கின்றனர். இதனால், அவர்களது பணி நிரந்தர கோரிக்கைக்கு திராவிட மாடல் அரசு செவிசாய்க்கவில்லை. கர்நாடகா, பிஹார் மாநிலத்தில் வேலைவாய்ப்பில் பட்டியலின மக்களுக்கு கூடுதலாக 2 சதவீதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. ஆனால், தமிழகத்தில் பட்டியலின மக்களின் எண்ணிக்கை தெரியவில்லை. சமூக அநீதியை இழைக்கின்றனர்.பட்டியலின மக்களின் இடஒதுக்கீட்டில், உள்ஒதுக்கீடு கொண்டு வந்து பட்டியலின மக்களின் ஒற்றுமையை திமுக சீர்குலைத்து விட்டது.
தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2 மாதங்களில் முழு வடிவம் பெறும். அப்போது கூட்டணி குறித்து அறிவிப்போம். கடந்த தேர்தல்களில் அதிமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். அதிமுக கூட்டணியில் நாங்கள் மூத்த கட்சி. கூட்டணி ஆட்சிக்கான தேவை உருவாகவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## 300 பவுன் மோசடியில் தேடப்பட்டவரின் தாயார் பொங்கல் பரிசு வாங்கும்போது சிக்கினார்



மதுரை, ஜன.14-
சோழவந்தான் அருகே இரும்பாடி கிராமத்தை சேர்ந்தவர் ஜீவானந்தம். இவர் ஏலச்சீட்டு மற்றும் நகை அடகுக் கடை நடத்தி வந்தார். இவரிடம் அப்பகுதி மக்கள் ஏராளமானோர் நகை அடகு வைத்துள்ளனர். மேலும், ஏலச்சீட்டும் போட்டுள்ளனர்.
கடந்த 2017ம் ஆண்டு ஜீவானந்தம் குடும்பத்துடன், ஏலச்சீட்டு பணம், 300 பவுன் நகையுடன் திடீரென்று தலைமறைவானதாக கூறப்படுகிறது. அவர் எங்கு சென்றார் என்பது தெரியாததால் பணம், நகையை இழந்தோர் தவித்தனர்.இந்நிலையில் நேற்று முன்தினம் இரும்பாடி கிராமத்தில் ரேஷன் கடைகளில் பொங்கல் பரிசு தொகுப்பு ரூ.3 ஆயிரம் பணத்துடன் வழங்கப்பட்டு வந்தது. பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பரிசுத்தொகுப்பை வாங்கிக் கொண்டிருந்தனர். அப்போது, குடும்பத்துடன் தலைமறைவான, ஜீவானந்தத்தின் தாயார் ஜானகி(75), பொங்கல் பரிசு தொகுப்பு வாங்க காரில் ரேஷன் கடைக்கு வந்தார். சீட்டு மற்றும் நகை அடமானம் வைத்து ஏமாந்த மக்கள் ஜானகியைப் பார்த்ததும் அவரைச் சுற்றிவளைத்து பிடித்தனர். போலீஸாருக்கு தகவல் தெரிவித்து அவர்களையும் வரவழைத்தனர். சோழவந்தான் போலீஸார் நேரில் வந்து ஜானகியை பிடித்து விசாரித்தனர். ஜானகியை எக்காரணம் கொண்டும் விடுவித்துவிடக் கூடாது என போலீஸாரிடம் பெண்கள் வாக்குவாதம் செய்தனர். ஜீவானந்தம் எங்கே இருக்கிறார், ஏலச்சீட்டு, அடமானம் வைத்த நகைகளை குறித்து கேட்டனர். இதுகுறித்து மதுரை எஸ்பி அரவிந்த் கூறும்போது, ‘‘ஜானகியிடம் தொடர்ந்து விசாரணை நடக்கிறது. அவரது மகன் இருப்பிடம் குறித்து தேடி வருகிறோம். 300 பவுன் நகை மோசடி செய்யப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர்.
இதுதொடர்பாக புகார் மனுக்களை பெற்று வருகிறோம். முடிவில்தான் மோசடி எவ்வளவு நடந்தது என்பது தெரியும். விசாரணை முடிவில் ஜானகி கைது செய்யப்படுவார்’’ என்றார். இச்சம்பவம், மதுரை மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## BRICS நாடுகளின் ஆற்றல்களை உலக நலனுக்காக ஒன்றிணைக்க இந்தியா முயலும்” அமைச்சர் ஜெய்சங்கர்






புதுடெல்லி, ஜன.14-
“BRICS நாடுகளின் ஆற்றல்களை உலக நலனுக்காக ஒன்றிணைக்க இந்தியா முயலும்” என வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். நடப்பாண்டுக்கான பிரிக்ஸ் கூட்டமைப்பின் தலைமையை இந்தியா ஏற்க உள்ள நிலையில், அதற்கான அதிகாரப்பூர்வ இணையதளம் மற்றும் லோகோ வெளியீட்டு விழா டெல்லியில் இன்று நடைபெற்றது. இதில் பங்கேற்றுப் பேசிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், ‘‘மகர சங்கராந்திக்கு முன்பாக இன்று நாம் கூடி இருக்கிறோம். லோஹ்ரி, மாக் பிஹு, பொங்கல் என பல பெயர்களால் அழைக்கப்படும் இந்த திருவிழா, உத்தராயணம் என்று அழைக்கப்படும் சூரியனின் வடக்கு நோக்கிய பயணத்தைக் கொண்டாடுகிறது. இந்த மங்களகரமான தருணத்தில் உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திருவிழாக்கள் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்துவது போலவே, இந்தியாவின் BRICS தலைமைப் பொறுப்பும், உலக நலனுக்காக ৰিஸிமிசிஷி நாடுகளின் ஆற்றல்களை ஒன்றிணைக்க முயலும். 2026ல் பிரிக்ஸ் தலைமைப் பொறுப்பை ஏற்க இந்தியா தயாராகும் இந்த நேரத்தில், இந்த அமைப்பின் பயணத்தில் ஒரு முக்கியமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். 2026 ல் பிரிக்ஸ் கூட்டமைப்பு தொடங்கப்பட்டு 20 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்த காலகட்டத்தில் அது வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்களுக்கு இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க தளமாக சீராக வளர்ந்துள்ளது. மாறி வரும் உலக யதார்த்தங்களுக்கு ஏற்ப ৰিஸிமிசிஷி அமைப்பு தனது நிகழ்ச்சி நிரல்களையும் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையையும் விரிவுபடுத்தியுள்ளது. மேலும், மக்களை மையப்படுத்திய வளர்ச்சி, உரையாடல், ஒத்துழைப்பு ஆகியவற்றை ஊக்கப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது. தற்போதைய உலகளாவிய சூழல், சிக்கலான மற்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய சவால்கள், புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள், சிக்கலான பொருளாதார நிலப்பரப்புகள், காலநிலை தொடர்பான அபாயங்கள், தொழில்நுட்ப மாற்றங்கள், நீடித்த வளர்ச்சி இடைவெளிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவை பிராந்தியங்கள் முழுவதும் உள்ள நாடுகளை பாதிக்கிறது. இந்த சூழலில் ৰিஸிமிசிஷி ஒரு முக்கியமான மன்றமாகத் திகழ்கிறது. இது வளர்ச்சியின் வெவ்வேறு நிலைகளில் உள்ள தேசிய முன்னுரிமைகளைக் கணக்கில் கொண்டு நடைமுறைத் தீர்வுகளை வழங்குகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதலால் உத்வேகம் பெற்று, மனித நேய மே முதன்மை, மக்கள் மைய அணுகுமுறை ஆகியவற்றுடன் இந்தியா தனது தலைமைப் பொறுப்பை அணுகுகிறது. BRICS தனது உறுப்பினர்களின் தனித்துவமான அடையாளங்களை மதிக்கும் அதேவேளையில், அவர்களின் கூட்டுப் பங்களிப்புகளில் இருந்து வலிமையைப் பெறுகிறது. இன்று தொடங்கப்பட்டுள்ள பிரிக்ஸ் இந்தியா இணையதளம், இந்தியாவின் தலைமைத்துவத்தின்போது ஒரு பொதுவான தளமாகச் செயல்படும். கூட்டங்கள், முன்முயற்சிகள், முடிவுகள் குறித்த தகவல்களை வழங்கும். மேலும், அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் ஈடுபாட்டை எளிதாக்கும். இது தகவல்களை சரியான நேரத்தில் பரப்ப உதவும்’’ என தெரிவித்தார்.

## உருக்குலைந்த சாலைகளை சீரமைக்க கோரி நெல்லையில் பொதுமக்கள் திடீர் சாலை மறியல்



நெல்லை, ஜன.14-
நெல்லை வண்ணாரப்பேட்டை பரணி நகர் பகுதியில் பாதாள சாக்கடை பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் நீண்ட நாட்களாக உருக்குலைந்துள்ள போது சீரமைக்கப்படாததை கண்டித்து, அப்பகுதி மக்கள் நேற்று காலை திரண்டதோடு திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து ஸ்தம்பித்தது.
நெல்லை மாநகராட்சிக்கு உட்பட்ட வண்ணாரப்பேட்டை பரணி நகரில் சுமார் 500க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு பாதாள சாக்கடை பணிகள் நடந்தன. ஆனால், பணிகள் முடிந்து நீண்ட நாட்களாகியும் சாலை வசதி செய்து தரப்படவில்லை. இதுகுறித்து கலெக்டர் மற்றும் மாநகராட்சி கமிஷனரிடம் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் அதிருப்தியடைந்த அப்பகுதி மக்கள், நேற்று காலை திரண்டு வந்து வண்ணாரப்பேட்டை செல்லப்பாண்டியன் மேம்பாலம் அருகே சர்வீஸ் சாலையில் அமர்ந்து திடீர் மறியலில் ஈடுபட்டனர். அப்போது ‘சாலை வேண்டும்' என்ற பதாகைகளை ஏந்தியபடி கோஷங்களை எழுப்பினர். சம்பவ இடத்திற்கு வந்த நெல்லை மாநகராட்சியின் தச்சநல்லூர் மண்டல உதவி கமிஷனர் மகாலட்சுமி, பாளையங்கோட்டை போலீஸ் உதவி கமிஷ்னர் சுரேஷ், இன்ஸ்பெக்டர் முத்துகணேஷ் உள்ளிட்டோர் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அதிகாரியின் வாய்மொழி உத்தரவாதத்தை ஏற்க மறுத்த பொதுமக்கள், எழுத்துப்பூர்வமான உறுதிமொழி கேட்டனர். பின்னர் மாநகராட்சி உதவி கமிஷனர் மகாலட்சுமி, சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்படும் என எழுத்துப்பூர்வமாக உறுதியளித்தார். இதையடுத்து பொதுமக்கள் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த மறியல் போராட்டத்தால் பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்வோர் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், ஓராண்டுக்கு முன் ஏப்ரலில் சாலை போடுவோம் என்றனர், அப்போது போடவில்லை. அதன்பிறகு கடந்த டிசம்பரில் ரோடு போடுவோம் என்றனர். அதன்பிறகு ஜனவரில் போடுவோம் என்றார்கள். ஆனால் கடைசியாக சாலை இப்போது போட முடியாது என்றவுடன்தான் நாங்கள் சாலை மறியலுக்கு வந்தோம் என்றனர்.



## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் 4 நாட்கள் வண்ணமீன் வர்த்தக திருவிழா

சென்னை, ஜன.14-
பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஜன.15 முதல் 18ம் தேதி வரை வண்ணமீன் வர்த்தக திருவிழா நடைபெறவுள்ளது. இது குறித்து, சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட செய்திக் குறிப்பு: கொளத்தூர் பகுதியில் உற்பத்தி செய்யும் வண்ணமீன்களை எளிதாக சந்தைப்படுத்திடவும், வண்ணமீன் வர்த்தகத்தை அதிகரித்திடவும், சர்வதேச தரத்திலான வண்ணமீன் வர்த்தக மையம் ரூ.53.50 கோடி செலவில், வில்லிவாக்கம், சிவசக்திநகர் பகுதியில் 3.94 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வண்ணமீன் வர்த்தக திருவிழா வரும் 15ம் தேதி முதல் 18ம் தேதி வரை 4 நாட்களுக்கு கொளத்தூர் வண்ணமீன் வர்த்தக மையத்தில் காலை 10 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெற உள்ளது. இத்திருவிழாவில், வண்ணமீன் காட்சியகம், பேச்சு போட்டி, ஓவிய போட்டி, கோலப்போட்டி, விநாடி வினா போட்டி மற்றும் இதர பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இத்திருவிழாவில், பொதுமக்கள் கலந்துகொள்வதற்கு இலவச அனுமதி உண்டு.
எனவே, பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் வண்ணமீன் வர்த்தக திருவிழாவில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழர்களை அவமானப்படுத்துவதா?” ராஜ் தாக்கரேக்கு அண்ணாமலை சவால்



சென்னை. ஜன.14-
தமிழர்களை அவமானப்படுத்துவதா? நான் மும்பை வருவேன். தைரியம் இருந்தால் என் காலை வெட்டிப் பாருங்கள் என ராஜ் தாக்கரேக்கு பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை சவால் விடுத்துள்ளார். சென்னை விமான நிலையத்தில் பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: சமீபத்தில் வெளியான பராசக்தி திரைப்படத்தில் காங்கிரஸ் கட்சி தமிழக மக்களுக்கு இழைத்த துரோகங்களும், அவர்களின் அடாவடித்தனங்களும் மிக அற்புதமாகப் படம்பிடிக்கப்பட்டுள்ளன. ஈழப் படுகொலைக்கு பிறகு காங்கிரஸ் எப்படி மக்களால் துரத்தப்பட்டதோ, அதேபோல் அவர்களுடன் கூட்டணி வைப்பவர்களும் வீழ்வார்கள். ‘பராசக்தி’ திரைப்படம் திமுகவை வீழ்த்தும் முரசொலியாக அமையும். ஏனெனில் தீ எப்போதும் சொந்த வீட்டிலிருந்துதான் தொடங்கும். ஆதித்ய தாக்கரே, ராஜ் தாக்கரே எல்லாம் யார்? மும்பைக்கு வந்தால் என் காலை வெட்டுவேன் என மிரட்டுகிறார்கள். நான் ஒரு விவசாயியின் மகன். இந்த உருட்டல் மிரட்டலுக்கெல்லாம் பயந்திருந்தால் நான் இவ்வளவு தூரம் வந்திருக்க மாட்டேன். மூன்று தாக்கரேக்கள் கூட்டம் போட்டு என்னை அவமானப்படுத்துகிறார்கள். வேட்டி கட்டியவர்களையும் லுங்கி கட்டியவர்களையும் கிண்டல் செய்கிறார்கள். தமிழர்களை அவமானப்படுத்துவதா? அவர்களுடன் திமுக கூட்டணி வைத்திருப்பதுதான் ஆச்சரியம். நான் மும்பை வருவேன். தைரியமிருந்தால் என் காலை வெட்டிப் பாருங்கள்.
சீமானை யாரும் சாதாரணமாக எடை போட வேண்டாம். தனித்து நின்று கொள்கைக்காகப் போராடும் அவர் எட்டரை சதவீத வாக்குகளை வைத்துள்ளார். அதேபோல், விஜய் ஒரு வலிமையான சக்தியாகக் களமிறங்கியுள்ளார். அவரது வருகை போட்டியை இன்னும் சூடாக்கியுள்ளது. பழமையான பிராந்திய கட்சியான திமுகவின் பலத்தை குறைத்து மதிப்பிட முடியாது. தேசிய ஜனநாயக கூட்டணியில் எந்தக் கட்சிகளை எல்லாம் சேர்க்க வேண்டும் என்பதில் என்னுடைய கருந்தில் எந்த மாற்றமும் இல்லை. நான் ஆரம்பத்தில் என்ன கூறினேனோ அதில் நான் உறுதியாக இருக்கிறேன். இது சாதாரணமான தேர்தல் அல்ல. வித்தியாசமான தேர்தல். தமிழகத்தில் நீண்ட காலத்துக்குப் பிறகு நான்கு முனை போட்டி நடைபெறுகிறது. இந்த நான்கு முனை போட்டி என்பது வலிமையான பலமான போட்டியாக இருக்கும். எனவே ஒவ்வொரு ஓட்டும் முக்கியம். ஒவ்வொரு கட்சியும் முக்கியம். இந்திய அணியில் கோலி மட்டுமே விளையாடி ஜெயிக்க முடியாது. சிறந்த வீரர்கள் சேரும்போதுதான் அணி வலிமையாகும். ‘டீம்’ ல் புதுப் பிளேயர் ஆக விஜய்யை இறக்குவது குறித்து நான் எதுவும் கூற முடியாது. திமுகவை வீழ்த்த ஒத்த கருத்து உடையவர்கள் இணைய வேண்டும். ஆனால், மக்கள் கொள்கைகளையும் பார்க்கிறார்கள். நேர் எதிர் கொள்கை கொண்டவர்கள் சேர்வது என்பது சைவ பிரியாணியையும் அசைவ பிரியாணியையும் கலந்து சாப்பிடுங்கள் என்று சொல்வது போன்றது.
இந்தத் தேர்தலில் நான் பயிற்சியாளரும் அல்ல, கேப்டனும் அல்ல. உங்களைப் போல் ஒரு பார்வையாளர்தான். மக்கள் எஜமானர்கள், அவர்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் தகுந்த பாடம் புகட்டுவார்கள். நடிகர் விஜய்யை சிபிஐ விசாரணைக்கு சென்றிருக்கிறார். சம்மன் வழங்கப்படுவதால் மட்டுமே ஒருவர் குற்றவாளி ஆகிவிட முடியாது. அவர் சட்டப்படி எதிர்கொள்கிறார். இதில் நான் கருத்து சொல்ல ஏதுமில்லை. நானும் அவரின் ரசிகனாக ‘ஜனநாயகன்’ படத்துக்காகக் காத் திருக் கி றே ன். இவ்வாறு அவர் கூறினார்.

# தே.ஜ. கூட்டணியில் இல்லை என நாங்கள் முடிவு எடுக்கவில்லை” ராமதாஸ் புதுக் கருத்து



சென்னை, ஜன.14-
பாமகவில் ராமதாஸ், அன்புமணி இடையே உச்சக்கட்ட மோதல் போக்கு நிலவி வருகிறது. தந்தை, மகனுக்கு இடையே நிலவி வரும் பிரச்சினையால் கட்சியினர் இரு பிரிவுகளாக செயல்பட்டு வருகின்றனர். இதற்கிடையில், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியை சந்தித்த அன்புமணி கூட்டணியை உறுதி செய்தார். இதையடுத்து, ராமதாஸ் யாருடன் கூட்டணி அமைக்கலாம் என்று கடந்த சில தினங்களாக தைலாபுரம் தோட்டத்தில் கட்சியினருடன் ஆலோசனை நடத்தினார். இந்நிலையில், சென்னையில் முகாமிட்டு கூட்டணி பேச்சுவார்த்தையில் அவர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். கூட்டணி தொடர்பாக ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்து வருவதாக கூறுகிறார்கள். தேர்தல் நேரத்தில் இந்த மாதிரி பல யூகங்கள், பேச்சுக்கள் வரத்தான் செய்யும். இதில் உண்மையும் இருக்கும். பொய்யும் இருக்கும். தேசிய ஜனநாயக கூட்டணியில் நாங்கள் இல்லை என்று இன்னும் நாங்கள் முடிவு எடுக்கவில்லை. நாட்கள் வேகமாக போய்க்கொண்டிருக்கிறது. விரைவில் முடிவு எடுப்போம். புதிய கூட்டணிக்கு செல்வோமா என்பதை பொறுத்தவரை, தேர்தல் நேரத்தில் எதுவும் நடக்கலாம். நடக்காமலும் போகலாம். புதிய கூட்டணி ஏற்படுமா என்பதற்கு பொறுத்து இருந்து பதில் சொல்கிறேன். திமுகவுடன் கூட்டணி இருக்குமா என்பதை தற்போதைய நிலையில் உறுதிப்படுத்த முடியாது என்றார்.

# டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை: சம்பா நெல் அறுவடை பாதிப்பால் விவசாயிகள் கவலை



தஞ்சாவூர், ஜன.14-
காவிரி டெல்டா மாவட்டங்களில் 9 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை தொடங்கி உள்ளது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில் சில நாட்களாக பனிப்பொழிவு அதிகமாக இருந்தது, மேலும் 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், ஈரப்பதம் அதிகரித்துள்ளதால், இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் பணி தொய் வடைந்துள்ளது. சில இடங்களில் நெற்கதிர்கள் வயலில் சாய்ந்துள்ளன. அதேநேரம், அறுவடை செய்யப்பட்ட நெல்மணிகளை விற்பனை செய்ய கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளன. இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க டெல்டா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ப.ஜெகதீசன் கூறியதாவது: சம்பா நெல் அறுவடையை பொங்கல் பண்டிகைக்கு முன்பாக முடிக்க தயாராக இருந்த நேரத்தில், கடந்த வாரம் பனிப் பொழிவு அதிகமாக இருந்தது. இதனால், நெல்லின் ஈரப்பதம் அதிகரித்து காணப்பட்டதால், அறுவடை தாமதமானது. இந்நிலையில், தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், அறுவடை இயந்திர வாகனங்களை வயலில் இறக்க முடியவில்லை. இதனால், அறுவடை பணிகளை மேற்கொள்ள முடியவில்லை.

பொங்கலுக்குள் அறுவடையை முடித்தால், அந்த பணத்தைக் கொண்டு பண்டிகையை விவசாயிகள் சிறப்பாகக் கொண்டாடியிருப்பார்கள். மழை குறைந்தால்தான் அறுவடை தீவிரமடையும். இவ்வாறு அவர் கூறினார். நாகை, மயிலாடுதுறை, காரைக்கால், திருவாரூர் மாவட்டங்களில் நேற்று அதிகாலை முதல் பரவலாக மிதமான மழை பெய்தது. இதனால், பல இடங்களில் சம்பா அறுவடை பணி பாதிக்கப்பட்டுள்ளதுடன், நெற்பயிர்களில் புகையான் நோய் தாக்குதல் ஏற்படும் அபாயம் உள்ளதால் விவசாயி கள் கவலையடைந்துள்ளனர்.



# தமிழக மீனவர்கள் 10 பேர் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிப்பு

ராமேசுவரம், ஜன.14-
இலங்கை கடற்படையினரால் 10 தமிழக மீனவர்களை சிறைப்பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இலங்கைக்கு அருகே தென்கிழக்கு வங்கக்கடலில் ஏற்பட்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்து தாழ்வு மண்டலம் காரணமாக கடந்த ஒரு வாரமாக ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு அனுமதி சீட்டு ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில் கடலுக்குச் செல்லவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) வானிலை இயல்பு நிலைக்கு திரும்பியதை தொடர்ந்து, நேற்று (திங்கட்கிழமை) காலையில் ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் 400க்கும் மேற்பட்ட படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இதனிடையே, நெடுந்தீவு அருகே ராமேசுவரம் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, தென்னரசு என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை சிறைப்பிடித்துள்ளனர். மேலும், படகில் இருந்த ஜார்ஜ், சுதன், கனகராஜ், சுமித், பரலோக ராஜ், கோபி, ஆரோக்கிய ரூபட், பிரேம்குமார், தினேஷ், ராஜேஸ் ஆகிய 10 மீனவர்களை இன்று (செவ்வாய்கிழமை) அதிகாலை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 10 ராமேசுவரம் மீனவர்களையும் காரைநகர் கடற்படை முகாமுக்கு கொண்டு சென்ற இலங்கை கடற்படையினர் விசாரணைக்கு பின்னர் அந்நாட்டு மீன்வளத் துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர். அதனை தொடர்ந்து சிறைப்பிடிக்கப்பட்ட 10 மீனவர்கள் மீதும், எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். பின்னர் நீதிமன்றக் காவலில் 10 தமிழக மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

நடப்பாண்டில் ஜனவரி மாதம் மட்டும் 3 விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்து 29 தமிழக மற்றும் புதுசேரி மாநில மீனவர்களை கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிமுக கூட்டணியில் ஓரிரு நாளில் புதிய கட்சி’ : பழனிசாமி தகவலால் பரபரப்பு



சென்னை, ஜன.14-
அதிமுக கூட்டணியில் ஓரிரு நாளில் புதிய கட்சி இணைய இருப்பதாக, தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுடனான நேர்காணலில் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட விருப்பம் உள்ளவர்களிடம் இருந்து கடந்த மாதம் விருப்ப மனுக்களை கட்சி தலைமை பெற்றது. இதில், மொத்தம் 10,175 விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. அதில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தங்களின் தொகுதியில் போட்டியிட வேண்டும் என 2,187 பேர் விருப்ப மனு அளித்திருந்தனர்.

தேர்தல் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுடனான நேர்காணல், சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில், கடந்த ஜன.9ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. பொதுச்செயலாளர் பழனிசாமி நேர்காணல் செய்து வருகிறார். 3ம் நாளான நேற்று, விருதுநகர் மேற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் வடக்கு, கடலூர் தெற்கு, கடலூர் மேற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி புறநகர் வடக்கு ஆகிய கட்சி அமைப்பு ரீதியான மாவட்டங்களைச் சேர்ந்த, விருப்பமனு அளித்தவர்கள் பங்கேற்றனர். பிற்பகலில் நடைபெற்ற நேர்காணலில் திருச்சி மாநகர், திருச்சி புறநகர் தெற்கு, பெரம்பலூர், அரியலூர், கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கட்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். நேர்காணலின் போது பழனிசாமி பேசியதாவது:

தேர்தல் நெருங்கி வருகிறது. அதிமுகவினர் அனைவரும் பொது மக்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும். திமுக அரசால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டால், பொதுமக்களுக்கு ஆதரவாக அதிமுகவினர் நிற்க வேண்டும். 5 ஆண்டு திமுக அரசின் மக்கள் விரோத செயல்கள், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாதது, அதிமுக அரசு கொண்டு வந்த திட்டங்களை நிறுத்தியது உள்ளிட்டவற்றை விளக்கி சொல்ல வேண்டும். விரைவில் சில முக்கிய கட்சிகள் அதிமுக கூட்டணியில் இணைய உள்ளன. ஓரிரு நாளில் புதிய கட்சி ஒன்று இணைய உள்ளது. தமிழகத்தில் பலமான கூட்டணி, அதிமுக தலைமையில் அமையும். அதனால் அதிமுகவின் வெற்றி குறித்து தொண்டர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். கட்சி பணிகளை தீவிரமாக செய்யுங்கள். உங்களில் பலருக்கு வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். சில தொகுதிகளை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கலாம். இருப்பினும், அதிமுக கூட்டணியின் வெற்றிக்கு அனைவரும் பாடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசியதாக அதிமுக வட்டாரங்கள் தெரிவித்தன. ஓரிரு நாளில் புதிய கட்சி ஒன்று அதிமுக கூட்டணியில் சேரும் என்று பழனிசாமி தெரிவித்துள்ள நிலையில், அந்தக் கட்சி எது என்று பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



# மனிதருக்குள் சமத்துவத்தை காத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் : அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி ஜன14-
தமிழகத்தில் சமத்துவபுரங்களை கொண்டு வந்து மனிதருக்குள் சமத்துவத்தை காத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று செம்பட்டியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

தமிழகம் முழுவதும் திமுக சார்பாக சமத்துவ பொங்கல் விழா நடைபெற்று வருகிறது. நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம் திமுக சார்பாக சமத்துவ பொங்கல் செம்பட்டி சந்தை திடலில் நடைபெற்றது. விழாவிற்கு நிலக்கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சௌந்திரபாண்டியன் தலைமை தாங்கினார். நிலக்கோட்டை தொகுதி திமுக தொகுதி பொறுப்பாளாரும், மாவட்ட திமுக பொறுப்பாளருமான கு.சத்தியமூர்த்தி, தலைமை திமுக செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய துணைச் செயலாளர் செம்பட்டி அண்ணாதுரை வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும். ஊரக வளர்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் சமத்துவ பொங்கலை துவக்கி வைத்துவிட்டு பேசுகையில், தமிழகத்தில் தந்தை பெரியார் வழியில் சமத்துவத்தை கொண்டு வந்து பாதுகாத்த தலைவர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள். சமத்;துவபுரங்களை கொண்டு வந்து மனிதருக்குள் சமத்துவத்தை ஏற்படுத்தினார். திராவிட மாடல் ஆட்சி நயாகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை உருவாக்கியதால் மனித நேயமும், சமத்துவமும் தமிழகத்தில் அதிகரித்துள்ளது என்றார். இங்கு 200 பெண்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சமத்துவ பொங்கல் விழாவில் கலந்து கொண்டது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகேசன், பாறைப்பட்டி ராமன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், நிலக்கோட்டை வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் அழகேசன், ஆரோக்கியம், ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் பெனிட், மாவட்ட விவசாய தொண்டரணி துணை அமைப்பாளர் சங்கர், ஒன்றிய தகவல் நுட்ப அணி துணை அமைப்பாளர் பதினெட்டாம்படி (எ) பாண்டியராஜன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, பாப்பாத்தி, இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ், வழக்கறிஞர் அணியைச் சேர்ந்த சி.எஸ்.தர்ஷினி, அ.அபிநந்தினி, மற்றும் நிலக்கோட்டை வடக்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள், இளைஞரணியினர் மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# 10 நிமிட டெலிவரி’ விளம்பரத்தை கைவிட்டது பிளிங்கிட்: மத்திய அரசின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை

புது டெல்லி, ஜன.14-
ஆன்லைன் டெலிவரி நிறுவனங்களின் போராட்டத்தை தொடர்ந்து, பிளிங்கிட் நிறுவனம் தனது ‘10 நிமிட டெலிவரி’ சேவை விளம்பரத்தை நிறுத்தியுள்ளது. இன்று மதியம் பயனர்கள் பிளிங்கிட் செயலியைத் திறந்து பார்த்தபோது, ‘10 நிமிட டெலிவரி சேவை’ விளம்பரம் காட்டப்படவில்லை. சோமாட்டோ, ஸ்விக்கி, பிளிங்கிட், இன்ஸ்டாமார்ட் மற்றும் ஜெப்டோ போன்ற ஆன்லைன் டெலிவரி நிறுவனங்கள் உணவு மற்றும் மளிகைப் பொருட்களை விநியோகம் செய்கின்றன. டிசம்பர் 25 மற்றும் டிசம்பர் 31 ஆகிய தேதிகளில் இந்த நிறுவனங்களின் டெலிவரி தொழிலாளர்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின்போது, பணிச்சூழல், டெலிவரி அழுத்தம் மற்றும் பணி பாதுகாப்பின்மை போன்ற பிரச்சினைகளை எழுப்பினர். இதனையடுத்து இந்த விவகாரம் குறித்து மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

குறுகிய நேர டெலிவரி விளம்பரங்கள் ஊழியர்களுக்கு கடுமையான பணி அழுத்தத்தை உருவாக்குவதாக தொழிலாளர் சங்கங்கள் வலியுறுத்தி வருகின்றன. இதனை தொடர்ந்து மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா ஆன்லைன் டெலிவரி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, டெலிவரி ஊழியர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஆன்லைன் வணிக நிறுவனங்கள் தங்களது விளம்பரங்களில் ‘10 நிமிட டெலிவரி' உள்ளிட்ட குறுகிய கால டெலிவரி குறித்த விளம்பரத்தை நீக்குமாறு மத்திய அரசு தரப்பில் அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து, பிளிங்கிட் தனது அனைத்து விளம்பரங்களிலும் இருந்து ‘10 நிமிட டெலிவரி’ என்ற விளம்பரத்தை நீக்கியுள்ளது. மேலும், அனைத்து நிறுவனங்களும் தங்கள் விளம்பரங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்களிலிருந்து குறுகிய கால டெலிவரி நேர வாக்குறுதிகளை அகற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உறுதியளித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

# தமிழகத்தில் ஆட்சியில் பங்கு: ஸ்டாலினும், ராகுலும் முடிவு செய்வார்கள்” : சொல்கிறார் செல்வப்பெருந்தகை



நீலகிரி, ஜன.14-
தமிழகத்தில் ஆட்சியில் பங்கு வேண்டும் என்று காங்கிரஸாரும், பங்கு இல்லை என திமுகவும் கூறி வரும் நிலையில், இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலினும், ராகுல் காந்தியும் பேசி முடிவெடுப்பார்கள் என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். தமிழ்நாடு காங்கிரஸ் மகளிர் அணி சார்பில் சமத்துவ பொங்கல் விழா சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று நடைபெற்றது. மகளிரணி மாநில தலைவி ஹசீனா சையத் தலைமையில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை பங்கேற்றார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நீலகிரி மாவட்டம் கூடலூரில் உள்ள ஒரு பள்ளியின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க ராகுல் காந்தி வருகிறார். கூட்டணி கட்சிகளுடன் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை. எல்லோருக்கும் கருத்துரிமை இருக்கிறது. அவரவர்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்கின்றனர். அந்த வகையில் அமைச்சர் ஐ.பெரியசாமி, ஆட்சியில் பங்கில்லை என அவரது கருத்தை தெரிவித்திருக்கிறார். காங்கிரஸார் கூட அவர்களின் கருத்தை தெரிவிக்கின்றனர். ஆனால் முடிவு செய்ய வேண்டியது தமிழகத்தில் இந்தியா கூட்டணி தலைவராக இருக்கும் முதல்வர் ஸ்டாலினும், மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல் காந்தியும் தான். அவர்கள் பேசி நல்ல முடிவை எடுப்பார்கள். கரூர் துயரம் தொடர்பாக தமிழக அரசு சிறப்பாக விசாரித்துக் கொண்டிருந்தது. நியாயமான விசாரணை நடந்திருக்கும். சிபிஐ விசாரணை என்ற பெயரில் பாஜக தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு, துன்புறுத்தி விஜய்யை சென்னையில் இருந்து டெல்லிக்கு வரவழைத்து அரசியல் ஒப்பந்தத்துக்கான முயற்சியை செய்கிறார்கள். இதில் ஒருபோதும் பாஜக வெற்றிபெறாது. அவர்களுக்கு சாதகமாக வரவில்லை என்றால் அனைத்தும் செய்வார்கள். விஜய்க்கு சிங்கம் வாயில் மாட்டிக் கொண்டது போல் ஆகிவிட்டது. பாஜகவை எதிர்த்தால் ஊழல் வழக்கு போடுவார்கள். அவர்களுடம் இணைந்து விட்டால் புனிதர்களாக பட்டம் கொடுத்துவிடுவார்கள். இதுதான் கடந்த கால வரலாறு. பராசக்தி திரைப்படம் தொடர்பாக பாஜக அண்ணாமலை ஒரு கருத்தை தெரிவித்துள்ளார். அது ஒரு கடந்த கால போராட்ட வரலாறு. அண்ணாமலை அவரது கட்சிக்கு விசுவாசமாக இருக்கச் சொல்லுங்கள். எங்கள் கட்சியை பற்றி பேச வேண்டாம். ஒவ்வொரு கட்சிக்கு ஒரு வரலாறு இருக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். தொடர்ந்து, தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி எப்போது என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, தமிழகத்தில் இப்போது நடப்பதும் காங்கிரஸ் ஆட்சி தான்” என்று செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.




# தாராபுரம் விவேகம் மேல்நிலைப்பள்ளியில் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுத் திருவிழா

தாராபுரம், ஜன.14-

தாராபுரம் விவேகம் மேல்நிலைப்பள்ளியில் 2025 2026 ஆம் ஆண்டிற்கான ( Sprint X Veveaham Sports Meet ) விளையாட்டுத் திருவிழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகத் திருப்பூர் மாவட்டத்தின் மாவட்டக் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக் மிறிஷி, இந்திய அளவில் பளு தூக்குதல் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற மோகனப்பிரியா, மாநில அளவில் கைப்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற செல்வி. ஜீவிதா அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வைப் பள்ளியின் தாளாளர் முனைவர் ஸி. சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலை வகுத்து வழிநடத்தினார். பள்ளியின் செயலாளர் முனைவர் ரி. பூபதி அவர்கள் மற்றும் பள்ளியின் இயக்குநர்கள் தலைமையேற்று விழாவைச் சிறப்பித்தனர். இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த தாராபுரம் வட்டாட்சியர் புவனேஸ்வரி, கிராம நிர்வாக அலுவலர் ஜெயசுதா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசினை வழங்கிச் சிறப்பித்தனர். இறுதியாக நாட்டுப்பண்ணோடு விளையாட்டுத் திருவிழா இனிதே நிறைவுற்றது.




■ திண்டுக்கல் மாவட்ட பாராளுமன்ற தொகுதி நிதியின் கீழ் கட்டப்பட்ட புதிய பகுதிநேர ரேஷன் கட்டிடத்தை, அச்சராஜக்காபட்டி கிராமத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட செயலாளர் பிரபாகரன்

# தென்காசியில் 2026-2027 ஆம் ஆண்டு தொழிற் பள்ளிகளுக்கான இணையதள விண்ணப்பங்கள் வரவேற்பு

சென்னை, ஜன.14-

2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு புதிய தொழிற்பள்ளிகள் துவங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், தொழிற்பள்ளிகளில் புதிய தொழிற் பிரிவுகள் / தொழிற் பிரிவுகளில் கூடுதல் அலகுகள் துவங்குதல் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக வரவேற்கப்படுகின்றன. 02.01.2026 முதல் www. skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு அங்கீகாரம் பெற ஒரு தொழிற்பள்ளி ஒரு இணையதள விண்ணப்பம் சமர்ப்பித்தால் போதுமானது.



விண்ணப்பிக்கவுள்ள அனைத்து தொழிற்பிரிவுகள் / கூடுதல் அலகுகளுக்கு தேவையான விவரங்கள் அனைத்தும் ஒரே விண்ணப்பத்தில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணம் மற்றும் ஆய்வுக்கட்டணம் RTGS/ NEFT மூலம் செலுத்த வேண்டும். அனைத்து தொழிற் பிரிவுகளுக்கும் சேர்த்து விண்ணப்ப கட்டணம் ரூ.5000/ மற்றும் ஆய்வு கட்டணம் ரூ.8000/ செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 28.02.2026. இதற்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் அங்கீகாரம் குறித்த தகவல் மற்றும் அறிவுரைகள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்மேலும் விபரங்களுக்கு 044 22501006 (113), 04633298088 என்ற தொலைபேசி என்ற இணையதள முகவரியிலும் எண்களிலும், Email ID : detischennai@gmail.com இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர்,இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

# சாலை பாதுகாப்பு வார விழாவில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு சாலை குறித்து விழிப்புணர்வு

தேனி ஜன.14-

தேனி மாவட்டம் தேவாரத்தில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தேவாரம் லயன்ஸ் கிளப் சார்பாக தேவாரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மோட்டார் வாகன ஆய்வாளர் சுந்தரராமன் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பற்றி எடுத்துரைத்தார்.மேலும் சாலை பாதுகாப்பு பற்றிய



பள்ளி மாணவிகளுக்கு பேச்சு போட்டிகளும் நடைபெற்றது. பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கு கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் முடிவில் பள்ளி மாணவ மாணவிகள் அனைவரும் சாலை பாதுகாப்பு குறித்த உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் லயன்ஸ் கிளப் நிர்வாகிகள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சின்னமனூரில் திமுக திராவிட பொங்கல் 2026 விளையாட்டு போட்டி

தேனி, ஜன.14-

தேனி மாவட்டம் சின்னமனூரில் திமுக சார்பில் திராவிட பொங்கல் 2026 என்ற தலைப்பில் விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட அளவிலான கபடி போட்டி நடைபெற்றது போட்டியில் சுமார் 20க்கும் மேற்பட்ட அணி வீரர்கள் கலந்து கொண்டனர். சின்னமனூர் நகர செயலாளர் முத்துக்குமார் துவக்கி வைத்தார். நடைபெற்ற போட்டியில் எம்.ஒய். எஸ். அணியினர் வெற்றி பெற்று , கோப்பையையும் மற்றும் பரிசு தொகையையும் பெற்றுச் சென்றனர்.




மேலும் அதனைத் தொடர்ந்து மாவட்ட அளவிலான வாலிபால் போட்டியும் நடைபெற்றது. இந்த போட்டியில் சுமார் 15 அணிகள் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்ற சின்னமனூர் அணியினர் கோப்பையை பெற்றுச் சென்றனர் இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தேனி மாவட்ட தி.மு.க.பிரமுகர் பஞ்சாப் முத்துக்குமார் ரொக்க பணத்தை வழங்கினார். இதில் தெற்கு மாவட்ட தொழிலாளர் துணை அமைப்பாளர் வீரமணி மற்றும் சின்னமனூர் நகர திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்ட காங்கிரஸ் தொழிலாளர் யூனியனின் பொதுக்குழு மற்றும் பொங்கல் விழா

தேனி, ஜன.14-

தமிழ்நாடு காங்கிரஸ் தொழிலாளர் யூனியனின் தேனி மாவட்ட பொதுக்குழு கூட்டம் மற்றும் பொங்கல் விழா மாவட்டத்தலைவர் பி. அருள்பாண்டி தலைமையில், மேல கூடலூர் கன்னிகாளி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாநில துணை தலைவர் சைமன் மற்றும்




கள்ளக்குறிச்சி மாவட்ட தலைவர் ஏ.எஸ்தர் எமிமாள், தூத்துக்குடி மாவட்ட தலைவர் எஸ். தேவராஜ் ஜஸ்டின் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். தேனி மாவட்ட உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். உறுப்பினர்களுக்கு பொங்கலை முன்னிட்டு பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டது.




■ திண்டுக்கல் மாவட்டத்தில் திராவிட கழகம் சார்பில் நடத்தப்பட்ட பொங்கல் விழாவில், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் பரிசுகளை வழங்கி பாராட்டினார். உடன் மாநகரச் செயலாளரும் துணை மேயருமான ச.ராஜப்பா, மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்



# மாநில அளவில் பாக்சிங் போட்டியில் தொடர் பதக்கம் வென்ற சேலம் நெத்திமேடு தனுஷ் குமாருக்கு பாராட்டுக்கள் குவிகின்றன

சேலம், ஜன.14-

தமிழ்நாடு மாநில அளவில் 4 வது தேசிய பாக்சிங் தின சாம்பியன்ஷிப் போட்டி கரூரில் நடந்தது. இதில் சப் ஜீனியர், ஜீனியர் யூத், எலைட் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் சேலம் காந்தி ஸ்டேடியத்தில் உள்ள கேலோ இந்தியா மையத்தில் பயிற்சி பெற்ற வீரர்களும் கலந்து கொண்டனர்.இந்த போட்டியில் வெற்றி பெற்ற 2024ம் ஆண்டு இரண்டாம் பரிசு வெள்ளிபதக்கமும், 2025ம் ஆண்டு மூன்றாம் பரிசு வெண்கல பதக்கமும் பெற்ற, சேலம் நெத்திமேடு பகுதியை சேர்ந்த தனுஷ்குமார் அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களும், கோப்பையும் மக்கள் சட்ட உரிமைகள் கவுன்சில் மாநில தலைவர் சந்திரசேகரன், தமிழ் பிரஸ் கிளப் மாநில மகளிர் அணி துணை தலைவரும், மக்கள் சட்ட உரிமைகள் கவுன்சில் மாவட்ட தலைவரும், சமூக சேவகியுமான சேலம் திவ்யலட்சுமி, மாவட்ட துணை செயலாளர் சண்முகசுந்தரம், ஊடக தலைவர் ராஜா, சூரமங்கலம் மண்டல செயலாளர் மணிகண்டன் மற்றும் நிர்வாகிகள் வழங்கி கௌரவப்படுத்தினர்.



■ மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் அமைந்துள்ள மாவட்ட கல்வி அலுவலகம் தொடக்கக்கல்வி சார்பில், சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் மாவட்ட கல்வி அலுவலர் ரகுபதி, நேர்முக உதவியாளர் அண்ணாமலை ராஜன், கண்காணிப்பாளர் செல்வராஜ், சாரதானந்தன் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



■ மதுரை புறநகர் அலங்காநல்லூர் ஒன்றிய இந்து இளைஞர் முன்னணி (HYF) சார்பில், சுவாமி விவேகானந்தரின் 163 வது பிறந்தநாள் விழா பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இதில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிவக்குமார், இந்து முன்னணி ஒன்றிய தலைவர் சுரேந்திரன்ஜி, குமார்ஜி உள்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை பாலமேட்டில் நாட்டு மாடு வளர்ப்போர் ஆலோசனைக் கூட்டம்

பாலமேடு.ஜனவரி.14-

மதுரை மாவட்டம் பாலமேட்டில் இயற்கை விவசாயிகள் மற்றும் நாட்டு மாடுகள் வளர்ப்போர் அறக்கட்டளையின் வருடாந்திர ஆலோசனை கூட்டம் பாலமேடு அருள்மிகு ஸ்ரீ வரம்தரும் ஆதிஜோதி முருகர் திருக்கோவில் வளாகத்தில் நடைபெற்றது. அதில் இயற்கை விவசாயத்தை வளர்க்கும் நோக்கத்தில் தமிழ்நாடு அளவில் சிறந்த இயற்கை விவசாயி தேர்வு செய்து ரொக்கம் 11111 வழங்கவும் சிறப்பு பரிசு 10 இயற்கை விவசாயிகளுக்கு நாட்டு பசுமாடு வழங்கவும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் மாபெரும் ஜல்லிக்கட்டு மற்றும் வடமஞ்சுவிரட்டு நடத்தவும் தீர்மானம் ஏற்றப்பட்டது. சிறந்த ஆன்மீக சேவை புரிந்த ஆதிஜோதி கரசேவா இயக்கத்தினருக்கு பொங்கல் பரிசாக புத்தாடை வழங்கப்பட்டது. அறக்கட்டளை கௌரவ தலைவர் நல்லமணிகாந்தி, நிறுவனர் ஜெயகணேசன், சேர்மன் சரவணராஜ், பொருளாளர் சுவேந்திரன், (ஆதிஜோதி கரசேவா இயக்க ஒருங்கிணைப்பாளர்) மற்றும் அறக்கட்டளை செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# விஜய்யிடம் தேர்தல் ஒப்பந்தம் போட துடிக்கும் பாஜக

கோவை, ஜன.14-

கோவையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை அளித்த பேட்டி: மும்பை குறித்து அண்ணாமலை அறிவில்லாமல் பேசுகிறார். அவர் எப்போதும் ஆக்கப்பூர்வமாக, அறிவுபூர்வமாக, நாகரிகமாக பேசமாட்டார். இந்தியா கூட்டணி எக்கு கோட்டை மாதிரி வலிமையாக இருக்கிறது. பாசிச சக்திகளை, மதவாதிகளை தமிழ்நாட்டிற்குள் நுழைய விடாது. காங்கிரஸ் கட்சிக்கு கொல்லைப்புற அரசியல் செய்யும் அவசியம் இல்லை, நேரடி அரசியல் செய்கிறோம். திமுக தவிர வேறு யாரிடமும் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. விஜய்யை புதுடெல்லி வரவழைத்து அரசியல் ஒப்பந்தம், தேர்தல் ஒப்பந்தம் போடுவதற்கு முயற்சி செய்யலாமா? என பாஜ துடித்துக் கொண்டுள்ளது என்றார்.

# சென்னை சங்கமத்தில் 1,500 கலைஞர்கள் பங்கேற்கின்றனர்: கனிமொழி பேட்டி

சென்னை, ஜன.14-

சென்னை சங்கமம் திருவிழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை தொடங்கி வைக்கிறார் என கனிமொழி பேட்டி அளித்துள்ளார். எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நாளை மாலை 6 மணிக்கு சென்னை சங்கமம் நிகழ்ச்சியை முதல்வர் தொடங்கி வைக்கிறார். சென்னை மாநகரின் 20 இடங்களில் நாளை முதல் 18ம் தேதி வரை கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சென்னை சங்கமத்தில் 1,500 கலைஞர்கள் பங்கேற்கின்றனர் என கனிமொழி பேட்டி அளித்துள்ளார். வடசென்னையில் ராயபுரம், கொளத்தூர், ஆவடி பகுதிகளில் நிகழ்ச்சி நடைபெறுகிறது என தெரிவித்தார்.



SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000